# நல்ல போர்ச்சேவகன்

## நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி

**(2 தீமோ 2:3)**




இன்று தேவனுடைய சபையின் அங்கங்களாய், அவருடைய மேய்ச்சலின் ஆடுகளாய் கோடானுகோடி விசுவாசிகள் இப்பூமியில் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஆண்டவரால் அருமையாக போஷிக்கப்பட்டு வழிநடத்தப்படுகின்றனர். ஆனால் இவர்களில் சிலரே கிறிஸ்துவுக்காக ஆவிக்குரிய யுத்தம் செய்யும் போர் வீரர்களாய் ஏழும்பி, கிறிஸ்துவின் இராஜ்யம் அகிலமெங்கிலும் பரவ போராடுகின்றனர். சுவிசேஷ ஊழியத்தின் மூலமாகவோ, சபை ஊழியத்தின் மூலகமாகவோ மற்றும் ஏதோ ஒரு விதத்தில் கிறிஸ்துவுக்காக எதையாவது செய்து, பிசாசின் இராஜ்யத்தை அழித்து, அவனுடைய பிடியில் சிக்கி இருப்போரை விடுவித்து அவர்களை கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குள்ளாய் கொண்டு வர வேண்டும் என்று முனைப்புடன் செயல்படுகின்றனர்.

இப்படிப்பட்டவர்களே மேற்க்கண்ட வசனத்தில் கூறியிருப்பது போல, கிறிஸ்துவுக்காக தீங்கநுபவிக்கவும் தயங்காதவர்கள். இவ்வுலகத்தில் தங்களுக்குரிய அனைத்தையும் (தங்கள் ஜீவன் உள்பட) கிறிஸ்துவுக்காக அர்பணித்து, அவருடைய கட்டளையை நிறைவேற்றுபவர்கள் **(மத் 28:19,20)**. இப்படிப்பட்டவர்களுக்குரிய மேன்மையை ஆண்டவரே பல இடங்களில் கூறியுள்ளார். **“ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என்**

**ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" (யோ 12:26), (மாற்கு 10:28-30).**

பழைய ஏற்பாட்டு காலத்தில், தேவதூதர்கள் திரித்துவ தேவனின் சேனை வீரர்களாய், அவருடைய செய்தியை அறிவிப்பவர்களாய் காணப்பட்டனர் (2 இரா 6:16,17), (யோசுவா 5:14). புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி தேவதூதர்கள் மூலமாகவே கொடுக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்கள் தேவ ஜனங்களாய், தேவனுடைய இராஜ்யத்தின் பிரஜைகளாய் இருந்தனரே தவிர, அவருக்காக போராடும் போர் வீரர்களாய் காணப்படவில்லை.

ஆனால் இன்றோ நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அழைப்பு அவருடைய இராஜ்யத்தின் பிரஜைகளாய் மாத்திரமல்ல, அவருடைய இராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காய், சத்துருவின் இராஜ்யத்தை அழித்து அவனுடைய பிடியில் இருக்கும் மக்களை விடுவிக்கும் போர்வீரர்களாய் வாழவே கர்த்தர் நம்மை அழைத்திருக்கிறார். அதே நேரத்தில் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் போர்வீரர்களாய் இருப்பவர்கள், கிறிஸ்துவின் இராஜ்யத்தின் பிரஜைகளாய் இருப்பவர்களை பாதுகாக்க வேண்டிய கடமையும் உடையவர்கள். இராஜாதி இராஜாவாம் கிறிஸ்துவே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி சிலரை மேய்ப்பர்களாக / போதகர்களாக ஏற்படுத்தியுள்ளார், இவர்களுடைய ஊழியம் இராஜ்யத்தின் பிரஜைகளை போஷித்து பாதுகாப்பதாகும். அதே நேரத்தில் சிலரை சுவிசேஷகர்களாக / தீர்க்கதரிசிகளாக ஏற்படுத்தியுள்ளார். இவர்களுடைய ஊழியம், சத்துருவின் கோட்டையை தகர்த்து சிறைப்பட்டவர்களை விடுவிப்பதாகும்.

எனவே தேவனுடைய இராஜ்யம் விரிவடைவதற்கு, ஏழுப்புதல் உண்டாவதற்கு நாம் அனைவரும் கிறிஸ்து இயேசுவின் சேனை வீரர்களாய் புறப்பட வேண்டியது அவசியம். ஆனால் இன்றோ, தேவனுடைய இராஜ்யத்தின் பிரஜைகளாய் சமாதானத்தோடு, ஆசிர்வாதத்தோடு வாழவே பலர் விரும்புகின்றனர். கிறிஸ்துவுக்காக சத்துருவை எதிர்த்து போராடுபவர்கள் வெகு சிலரே. அதிலும் சிலர் 2 தீமோ 2:3 கூறப்பட்டுள்ளபடி போராட்டத்தினால் ஏற்படும் எதிர்ப்புகளை காணும்பொழுது போர்களத்தையே விட்டு ஓடிவிடுகின்றனர். இன்னும் சிலர் நன்றாய் போரிட்டு கொண்டிருக்கும் மற்றவரை சோர்ந்து போகசெய்கின்றனர். இன்னும் சிலர் சத்துருவினால் வஞ்சிக்கப்பட்டு (உலகத்தால் கறைப்பட்டு) கிறிஸ்துவின் போர்வீரர்களுக்கு எதிராகவே போரிட்டு ஆண்டவருக்கு துரோகிகளாய் மாறிவிடுகின்றனர். விரோதிகளை காட்டிலும், துரோகிகளாய் காணப்படும் இப்படிப்பட்ட யூதாஸ் காரியோத்து போன்றவர்களாலேயே தேவனுடைய இராஜ்யம

விரிவடைய முடியாமல் போகிறது. இவர்கள் தேவனுக்கு அல்ல, உலக பொருளுக்கே ஊழியம் செய்து, தேவ பக்தியின் வேஷத்தை தரித்து கொள்பவர்கள். தங்கள் அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவர்கள். கிறிஸ்துவின் நாமம் தூஷிக்கபட இப்படிப்பட்டவர்களே காரணம்.

எனவே கிறிஸ்துவுக்காக நல்ல போராட்டத்தை போராடும், நல்ல போர்ச்சேவகராய், நாம் ஒவ்வொருவரும் எழும்ப வேண்டியது அவசியமாகும். முழுநேர ஊழியத்தை செய்யமுடியாவிட்டாலும், ஏதாவது ஒரு செயலை செய்துகொண்டே இருக்க வேண்டும். நம் மூலமாக ஒரு சிலராவது ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவை அறிந்து கொள்ள காரணமாய் இருக்க வேண்டும். போர்களத்தில் நாம் போராடும் பொழுது மரணமே ஏற்பட்டாலும், இறுதி வெற்றி நமது இராஜாவுக்கே உரியது. அப்படி நாம் வாழும்பொழுது, இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் நமக்கு கிடைக்கும் பிரதிபலன் பெரிதாயிருக்கும். இயேசுவின் வீரனாகிய நானும் அப்படிப்பட்ட ஒரு சிறு ஊழியத்தையே செய்துவருகிறேன். இராஜாதி இராஜவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்கே மகிமை உண்டாவதாக, ஆமென், அல்லேலூயா.

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொ 15:57).**